



# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்


தலைமைக் கழகம்

எண்: 21/11, 1வது பிரதான சாலை, கற்பகம் தோட்டம், அடையாறு, சென்னை-600 020.
தொலைப்பேசி : 044 -2848 1235

டிடிவி தினகரன்
பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 15.03.2025

## திமுக அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கை: விவசாயத்தை பாதுகாக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் எந்த வகையிலும் உதவாத வெற்று அறிக்கை!

**வரலாறு காணாத வறட்சி, அதிகரிக்கும் சாகுபடி செலவு, பணி ஆட்கள் பற்றாக்குறை, மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்கள் என பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் உலகிற்கே உணவளிக்கும் உன்னதமிக்க உழவுத் தொழிலில் ஈடுபட்டு வரும் உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் அடங்கியதாக இருக்க வேண்டிய வேளாண் நிதிநிலை அறிக்கை, அவர்களை மேலும் துன்பத்திற்குள்ளாக்கும் வெற்று அறிக்கையாக அமைந்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.**

சிறு, குறு விவசாயிகளின் கடன் தள்ளுபடி, தென் தமிழகத்திற்கென மதுரையில் வேளாண் பல்கலைக்கழகம், விண்ணப்பித்த அனைவருக்கும் தடையின்றி மும்முனை மின்சாரம், நெல், கரும்பைப் போல பருப்பு வகைகள் மற்றும் சிறு தானியங்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் என 2021 சட்டமன்ற தேர்தலின் போது திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் வேளாண்மை மற்றும் உழவர் நலன் எனும் தலைப்பில், வரிசை எண் 27 முதல் 87 வரை இடம்பெற்றிருக்கும் வாக்குறுதிகள் நிறைவேறும் என எதிர்பார்த்து காத்திருந்த விவசாய பெருமக்களுக்கு திமுக அரசின் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை ஏமாற்றத்தையே பரிசாக கொடுத்திருக்கிறது.

**கரும்புக்கான குறைந்தபட்ச ஆதார விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2500 ஆக நிர்ணயம் செய்ய வேண்டும், விவசாயிகளுக்கான நிதியுதவி, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருப்பதன் மூலம், வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்பாக விவசாயிகளிடம் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டம் கண்துடைப்பு நாடகம் என்பது தெள்ளத் தெளிவாகிறது.**

ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டுகளில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவோ, வருமானத்தை பெருக்கவோ எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காத திமுக அரசு, தன் பதவிக்காலம் முடிவடையும் தருவாயில் உழவர் நல சேவை மையங்கள், மலைவாழ் உழவர்கள் முன்னேற்றம், ஊக்கத்தொகை என ஓராண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமில்லாத திட்டங்களை அறிவித்திருப்பது தமிழக விவசாயிகளை மேலும் ஏமாற்றும் செயலாகும்.

**தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், எண்ணெய் வித்துக்கள் இயக்கம், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் என ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெறும் விளம்பரத் திட்டங்களுக்கு ஆண்டு தவறாது கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கப்படுகிறதே தவிர அத்திட்டத்தால் விவசாயிகள் பயனடைந்ததாக எந்தவித தகவலும் இதுவரை தென்படவில்லை.**

நகரமயமாதல், விற்பனை நிலங்களாக மாறும் விளைநிலங்கள் என பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் விவசாயத்தை விட்டே வெளியேறக் கூடிய சூழலுக்கு ஏராளமான விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயத்தையே தன் உயிர்மூச்சாக கருதி தலைமுறை தலைமுறையாக விவசாயத்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எந்த திட்டத்தையும் அறிவிக்காமல், அவர்களின் விபத்து

மரணத்திற்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரித்திருப்பது கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்ற வரிகளையே நினைவுபடுத்துகிறது.

**காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மழை, வெள்ளம், புயல் என இயற்கை பேரிடர்களால் பாதிப்புக்குள்ளாகும் பயிர்சேதங்களை உடனடியாக கணக்கெடுத்து அதற்கான உரிய நிவாரணத்தை வழங்குவதற்கு ஆக்கப்பூர்வமான செயல்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையை நிராகரித்திருப்பதன் மூலம் ஒட்டுமொத்த தமிழக விவசாயிகளையும் திமுக அரசு வஞ்சித்துள்ளது.**

விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ள கிராமப் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தின் அடிப்படையாக உள்ள கால்நடை பராமரிப்புக்கும் எந்தவித ஆக்கப்பூர்வமான திட்டங்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாக தெரியவில்லை. டெல்டா மாவட்டங்களில் உள்ள கால்வாய்களை தூர்வார பல கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதும், பருவமழை தொடங்கும் நேரத்தில் அவசரகதியில் அப்பணிகளை அரைகுறையாக செய்வதும் வாடிக்கையாகி வரும் நிலையில், நடப்பாண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையிலும் காவிரி டெல்டா பகுதிகளில் 6,179 கி.மீ நீளம் கொண்ட ஆறுகள் மற்றும் கால்வாய்களை தூர்வார ரூ.120 கோடி ஒதுக்கியிருப்பது வேடிக்கையானது.

**திமுக அரசு இன்று தாக்கல் செய்திருக்கும் வேளாண் நிதிநிலை அறிக்கையை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, விவசாயத்தை பாதுகாக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் எந்த வித ஆக்கப்பூர்வமான திட்டங்களும் இடம்பெறாத வெற்று அறிக்கையாகவே அமைந்துள்ளது.**

**டிடிவி தினகரன்**